www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

VNR11His

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் வரலாறு மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20×1=20
ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) ............. கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளை குறிப்பிடுகின்றன.
அ) க்யூனிபார்ம் ஆ) ஹைரோக்ளைபிக்ஸ் இ) தேவநாகரி ஈ) கரோஷ்டி

2) மேல்கங்கைச் சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) குரு - பாஞ்சாலம் ஆ) கங்கைச் சமவெளி இ) சிந்துவெளி ஈ) விதேகா

3) ............. வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கிய பங்காற்றியது.
அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை

4) ............. என்ற இலங்கையில் கிடைத்த பாலியில் எழுதப்பட்ட விரிவான வரலாற்று நூல் மௌரியப் பேரரசு பற்றி அறிந்துகொள்ள உதவும் முக்கியமான சான்றாகும்.
அ) மகாவம்சம் ஆ) தீபவம்சம் இ) பிரமாணம் ஈ) முத்ரராட்சசம்

5) கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது?
i) தலையாலங்கானம் - நெடுஞ்செழியன்
ii) பட்டினப்பாலை - உருத்திரங்கண்ணனார்
iii) கஜபாகு - இலங்கை
iv) திருவஞ்சிக்களம் - சோழர்
அ) (i) ஆ) (ii) இ) (iii) ஈ) (iv)

6) ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வணிகத்தின் தன்மைகள் பொது ஆண்டின் தொடக்கத்தில் மாறியதற்குக் காரணம்
i) பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில் மத்தியதரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோம் எழுச்சியுற்றது.
ii) அரேபியக் கடலில் வீசும் பருவக்காற்றுகளின் காலமுறை இயல்புகள் பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸால் கண்டுபிடிக்கப்பட்டது.
அ) (i) சரி ஆ) (ii) சரி
இ) (i), (ii) இரண்டுமே சரி ஈ) (i), (ii) இரண்டுமே தவறு

7) .............க்குக் கவிராஜா என்ற பட்டம் வழங்கப்பட்டது.
அ) முதலாம் சந்திரகுப்தர் ஆ) சமுத்திரகுப்தர்
இ) இரண்டாம் சந்திரகுப்தர் ஈ) ஸ்ரீகுப்தர்

8) ............. என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.
அ) குந்தலா ஆ) பானு இ) அவந்தி ஈ) சர்வாகதா

9) அயல்நாட்டு வணிகர்கள் ............. என்று அறியப்பட்டனர்.
அ) பட்டணசாமி ஆ) நாணாதேசி இ) விதேசி ஈ) தேசி

10) அரசப் பதவியை விடுத்து தில்லியிலிருந்து விலகி முப்பதாண்டுகள் அமைதியில் வாழ்ந்த ஒரே சுல்தான் .............
அ) முபாரக்ஷா ஆ) ஆலம் ஷா இ) கிசர் கான் ஈ) துக்ரில் கான்

11) ............. பெற்ற வெற்றியின் நினைவாக முதலாம் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தைக் கட்டினார்.
அ) இலங்கை ஆ) வட இந்தியா இ) கேரளம் ஈ) கர்நாடகம்

12) கீழ்க்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.
அ) சங்கம வம்சம், ஆரவீடு வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம்
ஆ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
இ) சாளுவ வம்சம், சங்கம வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
ஈ) சங்கம வம்சம், துளுவ வம்சம், சாளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

13) சமண மதத்திலிருந்த போது அப்பர் இவ்வாறு அறியப்பட்டார்.
அ) அரிசேனா ஆ) தீர்த்தங்கரர் இ) சிவஞானசித்தியார் ஈ) தர்மசேனர்

14) பாதுஷா நாமா என்பது .............ன் வாழ்க்கை வரலாறாகும்.
அ) பாபர் ஆ) ஹுமாயூன் இ) ஷாஜஹான் ஈ) அக்பர்

15) கிராம அளவில் வருவாய் வசூலை மத்திய அரசுக்கு அனுப்பும் பொறுப்பை
அ) தேஷ்முக்கு ஆ) குல்கர்னி இ) கொத்வால் ஈ) பட்டேல்

16) கீழ்கண்டவற்றுள் தவறான கூற்றினைத் தேர்ந்தெடு:
அ) இந்திய அரசர்கள் அயல்நாட்டவரிடம் கொண்டிருந்த ஈர்ப்பினை ஐரோப்பியர் சாதகமாக்கிக் கொண்டனர்.
ஆ) நறுமணத் தீவுகளில் டச்சுக்காரர் வெற்றி பெற்றனர்.
இ) கோல்பெர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டதற்கு காரணமாக இருந்தார்.
ஈ) புதுச்சேரியில் இன்றளவும் பிரெஞ்சுத் தாக்கத்தைக் காண முடிகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



17) இந்தியாவில் முதல் ஆங்கிலேய அரசப் பிரதிநிதி மற்றும் தலைமை ஆளுநராக இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர்
அ) காரன்வாலிஸ் ஆ) கானிங் இ) வெல்லெஸ்லி ஈ) ஹேஸ்டிங்ஸ்

18) இந்தியாவில் ............ ஆம் ஆண்டு பம்பாய்க்கும் தானேவுக்கும் இடையே முதல் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது.
அ) 1856 ஆ) 1855 இ) 1854 ஈ) 1853

19) வீரபாண்டிய கட்டபொம்மன் தொடர்பான பிரச்சனைகளை தவறாகக் கையாண்டதால் பணிநீக்கம் செய்யப்பட்ட ஆங்கிலேய ஆட்சியர் ............ ஆவார்.
அ) W.C. ஜாக்சன் ஆ) A. பானர்மேன் இ) S.R. லூசிங்டன் ஈ) P.A. ஆக்னியூ

20) கூற்று : சையது அகமது கான் அலிகரில் நிறுவிய நவீனப்பள்ளி, பின்னர் முகமதிய ஆங்கிலோ-ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சி பெற்றது.
காரணம் : முஸ்லீம்கள் ஆங்கிலக் கல்வி கற்பதை அவர் விரும்பினார்.
அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.
ஆ) கூற்று தவறு; காரணம் சரி.
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானவை.
ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

## பகுதி - II

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **7×2=14**

21) வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் யாவை?
22) ஜனபதங்களுக்கும், மகாஜனபதங்களுக்கும் இடையேயான வேறுபாட்டைக் கூறுக.
23) மதுரைக் காஞ்சியிலிருந்து நீ அறிவது என்ன?
24) தக்கோலப்போரின் முக்கியத்துவம் குறித்துக் கூறுக.
25) சோழர் காலத்தில் நிலத்தைக் கணக்கிடுவதற்கான வெவ்வேறு அலகுகளைக் கூறுக.
26) விஜயநகர அரசு யாரால் ஏற்படுத்தப்பட்டது? எதனால் அப்பெயர் வந்தது?
27) சிறுகுறிப்பு வரைக:
(அ) வில்லியம் ஹாக்கின்ஸ் (ஆ) சர் தாமஸ் ரோ
28) ஆளுநர் தாமஸ் மன்றோ பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
29) "வராகன்" (பகோடா) என்றால் என்ன?
30) சமூக நீதிக்கு ஜோதிபா பூலேயின் பங்கு என்ன?

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **7×3=21**

31) மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
32) மினாண்டர் குறித்து நீங்கள் அறிந்தவை யாவை?
33) குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.
34) எல்லோராவிலுள்ள கைலாசநாதர் குகைக்கோவில்.
35) இந்தியாவில் கஜினி மாமூதின் இராணுவத் தாக்குதல்களுக்கான காரணங்கள் என்னென்ன?
36) மூன்றாம் பானிப்பட் போரின் விளைவுகள்.
37) தரங்கம்பாடி
38) வாரிசு உரிமை இழப்புக்கொள்கை
39) 1806 ஆண்டு வேலூர் புரட்சி பற்றி எழுதுக.
40) சுவாமி விவேகானந்தர்

## பகுதி - IV

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7×5=35**

41) அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக. **(அல்லது)**
ஆ) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்கவும்.
42) அ) வட இந்தியாவின் நிலை குறித்த யுவான் சுவாங்கின் கருத்துகள் யாவை? **(அல்லது)**
ஆ) மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக.
43) அ) விஜயநகர ஆட்சியாளர்களின் ஆட்சிமுறை பற்றி விவரி. **(அல்லது)**
ஆ) முகலாயக் கட்டடக் கலையின் சிறப்பம்சங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.
44) அ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக. **(அல்லது)**
ஆ) முதலாம் பாஜிராவின் வாழ்க்கையையும் சாதனையையும் பற்றி விவாதிக்கவும்.
45) அ) இந்தியாவில் துய்ப்ளேவின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் பற்றிச் சுருக்கமாகக் கூறுக. **(அல்லது)**
ஆ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப்படைத் திட்டத்தினைப் பற்றி விவரி.
46) அ) 1857 - ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களையும் மற்றும் விளைவுகளையும் விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட ஐரோப்பியக் குடியேற்றங்களைக் குறிக்கவும்.
(i) கல்கத்தா (ii) புதுச்சேரி (iii) கோவா (iv) பழவேற்காடு (v) தரங்கம்பாடி
47) அ) தமிழ்நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்களை எடுத்துக்காட்டுக. **(அல்லது)**
ஆ) 1800 - 1900 வரை இந்தியாவில் நடைபெற்ற ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளுக்குக் காலக்கோடு வரைந்து காட்டவும்.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com